# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.4/2023

## அ.சா.8 (LW13 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | கைலகிரிவாசகம் | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | மாணிக்கம் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **12.06.2024** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1, 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது குரும்பபட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்து போன சென்ராயன் வீட்டில் காவல்துறையினர் வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்த போது நான் உடன் இருந்தேன். மேற்படி பார்வை மகஜரில் கையொப்பம் செய்தோம். என்னுடன் பக்கத்து வீட்டுக்காரர் வேலு என்பவர் கையொப்பம் செய்தார். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. இறந்து கிடந்த இடத்தை வரைந்தார்கள், சுவரில் கைரோகை உள்ளதா என்று பார்த்தார்கள். இது சம்பந்மாக போலீசார் என்னை விசாரித்தார்.

**1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சுவற்றில் கைரெகை உள்ளதா என்று பார்த்த விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். லென்ஸ் வைத்து கைரெகை உள்ளதா என்பதை பார்க்கவில்லை. சுமார் 7.45 மணியளவில் போலீசார் என்னிடமும், வேலுவிடமும் கையொப்பம் வாங்கினார்கள். அதில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது. மேற்படி பார்வை மகஜர் மற்றும் வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை போலீசார் பார்வையிடவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்த ஆவணத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>2ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.</u>**

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.12 16:59:54 +0530

Additional District Judge,

Dindigul.